பக்கங்கள்:-22

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 24 | ஞாயிற்றுக்கிழமை | 10.11.2024 | அதிர்வு 100

## ஜனாதிபதி, பிரதமர் இன்று யாழ். வருகை

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோர் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றனர்.

எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெற வுள்ள நாடாளுமன்றத் 05▶

# தமிழரசுக் கட்சியின் தலைவராக பணியாற்ற ஆணை தாருங்கள்!

## இப்படிக் கோருகின்றார் சிறீதரன்

“நான் மீண்டும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகப் பொறுப்பெடுத்து கட்சியை வழிநடத்த ஆணை தாருங்கள்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார். 05▶




## தமிழர்களின் கேள்விக்கு இன்று அநுர யாழில் பதில் தர வேண்டும்

### சுமந்திரன் கோரிக்கை



“தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் தமது திட்டம் யாது என்பதை இன்று ஞாயிற்றுக்கிழமை தேர்தல் பிரச்சாரத்துக்காக யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வெளிப் 05▶




தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அல்லது அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் பிரசாரம் ஏனோ இந்தத் தடவை வலு சூடாக அமையவில்லை. தொய்வு, தொங்கல், மந்தம் வெளிப்படையாகவே தெரிகின்றது. கஜேந்திரகுமார் சில மாதங்கள் சுகவீனம் காரணமாக நாட்டில் பிரசன்னமாகி இருக்காமையினால் ஏற்பட்ட தளர்வு இப்போதும் – பிரச் 05▶














# மண்வெட்டியால் தாக்கி பெண் ஒருவர் கொலை!

## வவுனியாவில் பயங்கரம்

(கி.வசந்தன்)

வவுனியா, ஈச்சங்குளம் பகுதியில் மண்வெட்டியால் தாக்கப்பட்டு பெண் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, ஈச்சங்குளம், அம்மிவைத்தான் பகுதியில் உள்ள தனது வீட்டில் மேற்படி பெண் தனிமையில் இருந்துள்ளார். இதன்போது அங்கு அத்துமீறி வந்த இளைஞர் ஒருவர் அந்தப் பெண் மீது மண்வெட்டியைக் கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதனால் படுகாயமடைந்த பெண் அம்புலன்ஸ் மூலம் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் வைத்தியசாலைக்குக் கொண்டு வருவதற்கு முன்னரே சாவடைந்துள்ளார் என்று வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் ஈச்சங்குளம் பகுதியை சேர்ந்த வெற்றிமலர் (வயது 57) என்ற பெண்ணே சாவடைந்தார்.

தாக்குதலை மேற்கொண்ட நபர் தப்பிச் சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்னர்.





யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்
இலங்கைத் தமிழரசுக் கட்சி
M.A.சுமந்திரன்
ஆட்புலம் -ஆதாரம் -ஆளுகை
1


எங்கள் சுயநிர்ணய
உரிமைக்கான அரசியலையும்
வளமான வாழ்க்கைக்கான
பொருளாதாரத்தையும்
உறுதிப்படுத்துவதற்கான எனது
பயணத்திற்கு உங்கள் ஆதரவை
நாடுகிறேன்.
4
மாற்றத்திற்கான
எங்கள் பயணத்தில்..
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
கிருஷ்ணவேணி
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
ඉලංකෙයි තමිල් අරසු කට්චි
Ilankai Tamil Arasu Kadchi
4

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சாரத்துக்கு மத்தியிலும் – வெளிப்படையாகத் தென்படுகின்றது.

வாதங்கள், விவாதங்களில் வலு சூடாக இருக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூட இப்போது சற்று அமுக்கியே வாசிக்கின்றார் என்பது போலவே தோன்றுகின்றது.

நேற்று யாழ்ப்பாணத்தில் 'மக்கள் மன்றம்' நிகழ்வில் பங்கு பற்றிய சுமந்திரன் நேரடியாக கஜேந்திரகுமாரின் பெயர் குறிப்பிடாமல் அவரை பகிரங்க விவாதத்துக்கு வர சவால் விடுத்திருந்தார்.

இது குறித்து யாழ்ப்பாண ஊடகம் ஒன்று உடனடியாகவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மூத்த தலைவர்களைத் தொடர்பு கொண்டது.

'பகிரங்க விவாதத்துக்கு வர சுமந்திரன் உங்களுக்கு சவால் விடுத்திருக்கிறார். அடுத்த இரண்டு நாள்களில் தேர்தல் பிரசாரம் முடிவுக்கு வருவதால் அதற்கு முன்னர் இந்த விவாதத்தை எங்கள் ஊடகத்தின் மூலம் நேரடியாக முன்னெடுக்கலாம் விவாதத்துக்கு வருவீர்களா?' – என்று கேள்வி எழுப்பப்பட்டது.

சுமந்திரனுடன் விதண்டாவாதம் பண்ணுவதற்கு நாங்கள் தயார் இல்லை என்று பதில் தரப்பட்டதாக அறிய வந்தது.

பகிரங்க விவாத்தத்தில் இருந்து விலத்தியே நடந்து கொள்கின்றது சைக்கிள் கட்சி...!

\+ \+ \+

அதிகாரத்துக்கு வந்துவிட்ட ஜே.வி.பி. உட்பட்ட தேசிய மக்கள் சக்தி தரப்பு, தமிழ் மக்களின் இனப் பிரச்சனை விவகாரம், 13 ஆவது திருத்தம் போன்றவை தொடர்பில் தனது கருத்துக்களை வெளிப்படையாக வெளிப்படுத்தாமல் ஒளித்துப் பிடித்து விளையாடும் தந்திரத்தையே இப்போதைக்கு கையாள விரும்புகின்றது எனத் தெரிகிறது.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்திருந்த அநுரா குமார திஸநாயக்க தமிழர்களுக்கு உடனடியாக முழு அளவில் காணி, பொலிஸ் அதிகாரங்களோடு 13 ஆவது திருத்தம் வழங்கப்படும் என்றும் காலகதியில் புதிய அரசமைப்பு மூலம் இனப் பிரச்சினை விவகாரத்துக்கும் நிரந்தர தீர்வு காண்போம் என்றெல்லாம் சூளுரைத்திருந்தார்.

ஆனால் அவரின் அரசு இப்போது பதவியேற்ற பின்னர் தமிழருக்கு நியாயம் செய்யும் விடயத்தில் தமது முந்தைய உரைகளை நடைமுறைப்படுத்தாமல் இழுத்தடிக்கின்றது.

இந்தக் கொள்கை தெளிவின்மை அல்லது போக்கு ஆளுங்க கட்சியின் தலைவரான அநுர குமார திஸநாயக்காவில் இருந்து கட்சியின் பிரமுகர்கள் எல்லோர் வரையிலும் பரவி, விரவிக் கிடக்கின்றது.

நேற்று தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று ஜனாதிபதியின் கட்சியான தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்டத் தலைமை வேட்பாளர் இடம் இது பற்றி கேள்வி எழுப்பியது.

அநுரா குமார திஸநாயக்கா கடைசியாக யாழ்ப்பாணம் வந்திருந்த போது சுமந்திரனிடமும் பிற தமிழரசுக் கட்சி தலைவர்களிடமும் உறுதி அளித்தபடி காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் கூடிய 13 ஆவது திருத்தக் கட்டமைப்பின் கீழ் வடக்கு – கிழக்கு மாகாண சபைகளை நிர்வகிக்க நடவடிக்கை எடுப்பீர்களா என்று இப்போது வெளிப்படையாக திரும்பத் திரும்பக் கேட்கப்பட்டது.

ஆனால் 13 ஆம் திருத்த படி மாகாணத்துக்கு பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்படும் என்று தெளிவுபடுத்த முடியாதவராக ஜே.வி.பியின் யாழ். மாவட்ட தலைமை வேட்பாளர் தடுமாறியமையைக் காண வியப்பாக இருந்தது.

கட்சியின் தலைவரால் மட்டுமல்ல, கட்சியின் தென்னிலங்கை உறுப்பினர்களால் கூட இவ்விடயத்தில் சுயாதீனமாக பதிலளிக்க முடியவில்லை என்பதுதான் உண்மை நிலைமை...!

---

## ஜனாதிபதி, பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேர்தலுக்குத் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவாகப் பரப்புரைக் கூட்டங்களில் பங்கேற்கவே இருவரும் யாழ்ப்பாணம் வருகின்றனர்.

யாழ்ப்பாணம் வரும் இருவரும் பாஷையூரில் நடைபெறவுள்ள பொதுக் கூட்டத்திலும் பங்கேற்று உரையாற்றவுள்ளனர்.

இதேநேரம், மேற்படி இருவரும் பல வேறு இடங்களில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவர் என்றும் தெரியவருகின்றது.

---

## தமிழர்களின் கேள்வி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

படையாகத் தமிழ் மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்."

– இவ்வாறு கோரிக்கை விடுத்திருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

நேற்று சாவகச்சேரியில் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர் சட்டத்தரணி கேசவன் சயந்தனின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட பிரசாரக் கூட்டத்திலேயே இத்தகைய கோரிக்கையை பகிரங்கமாக முன்வைத்தார் சுமந்திரன்.

சாவகச்சேரி பஸ் நிலையப் பகுதியில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சுமந்திரன் தெரிவித்த கருத்துக்களின் சாரம் வருமாறு:-

"கடந்த தடவை ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்துக்காகக் கடைசியாக அநுர குமார திஸாநாயக்க யாழ்ப்பாணம் வந்திருந்தபோது தமிழ் மக்களிடம் ஒரு கேள்வியை எழுப்பி இருந்தார்.

"தென்னிலங்கையில் ஓர் அதிகார மாற்றத்துக்கு அந்த மக்கள் தயாராகி விட்டார்கள். அந்த மாற்றத்தில் தமிழ் மக்கள் பங்களிக்க வேண்டாமா? பங்களிக்கவில்லை என்ற செய்தியை தென்னிலங்கை மக்களுக்குத் தெரிவிக்காமல் இருக்க நடவடிக்கை எடுங்கள்" என்ற சாரப்பட அநுரகுமார திஸாநாயக்க பேசியிருந்தார்.

அதற்கு அடுத்த நாளே அந்தக் கேள்விக்கு நான் யாழ்ப்பாணத்தில் வைத்துப் பதில் அளித்து இருந்தேன்.

தெற்கு மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தில் பங்களிக்க வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் தயாராக இருக்கின்றார்கள். ஆனால், கடந்த 75 வருடங்களாக இந்த நாட்டில் நீதி, நியாயமான மாற்றத்துக்குத் தமிழர்கள் முயன்று போராடி வருகின்றார்கள். அந்த மாற்றத்தில் தென்னிலங்கை இன்னும் சரியான முறையில் பங்களிக்கவில்லை. முதலில் அந்த மாற்றத்துக்குப் பங்களியுங்கள். அதன் பின்னர் தெற்கு விரும்பும் மாற்றத்துக்கு வடக்கு – கிழக்கு மக்கள் சேர்ந்து ஒத்துழைப்பார்கள் என்று நான் கூறியிருந்தேன்.

கடந்த 75 வருடங்களாக தமிழ் மக்கள் முன்னெடுக்கும் மாற்றத்துக்கான அந்த முயற்சியில் தமது பங்களிப்பு யாது, தாம் யாது செய்யப் போகின்றார், தமது திட்டம் என்ன என்பதை யாழ்ப்பாணத்துக்குத் தேர்தல் பிரசாரத்துக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை வரும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தமிழ் மக்களுக்குப் பதில் அளித்து தெளிவுபடுத்த வேண்டும்." – என்று சுமந்திரன் தமது சாவகச்சேரி பிரசாரக் கூட்ட உரையில் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

---

## தமிழரசுக் கட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் தமிழரசுக் கட்சி சார்பில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடுகின்ற நானும் எனது கட்சி சார்ந்த ஒன்பது பேரும் இந்தத் தேர்தலில் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையிலும், அவர்களுக்கான தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை அடைகின்ற வகையிலும், எங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலே கூறப்பட்ட அடிப்படைக் கொள்கைகளை மையமாக வைத்தும் ஒரு நீண்டகால வரலாற்றைக் கொண்ட தந்தை செல்வாவால் ஆரம்பிக்கப்பட்டு தேசியத் தலைவர் பிரபாகரனால் வழிகாட்டப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சமஷ்டிக் கொள்கையை தாரக மந்திரமாக வைத்துக் கொண்டு எங்கள் மக்களுக்கான பயணத்தை நாங்கள் முன்னெடுத்துச் செல்கின்றோம்.

எமது மக்களுக்கான இந்தப் பயணத்திலே தேர்தல்கள் ஒரு பெரிய முக்கிய புள்ளிகளாக மாறுகின்றன. அந்த முக்கியமான புள்ளிகளாக இருக்கின்ற தேர்தல் காலங்களில் மக்களுடைய ஆணை திரும்பத் திரும்ப வழங்கப்பட வேண்டியதாகவே இருக்கின்றது. அந்தவகையில் 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெற இருக்கின்ற 10 ஆவது நாடாளுமன்றத்துக்கான தேர்தல் என்பது தமிழ் மக்கள் தங்களுக்கான அரசியல் வாழ்வை, தங்களுக்கான அரசியல் உரிமையை, தங்களுக்கான அரசியல் இருப்பைத் தீர்மானித்துக் கொள்வதற்கான ஒரு தேர்தல் களமாக – அதற்காக தாங்கள் தெரிவு செய்கின்ற ஆணை வழங்குகின்ற ஒரு தேர்தலாக அமைகின்றது.

அந்தவகையில்தான் தமிழ் மக்கள் கூருணர்வோடும் தெளிவான பார்வையோடும் இந்த அரசியல் பெருவெளியில் நாங்கள் எப்படி இருக்க வேண்டும், நாங்கள் எவ்வாறு வாக்களிக்க வேண்டும், யார் யாரைத் தெரிவு செய்ய வேண்டும், யார் யார் நாடாளுமன்றம் சென்றால் எங்களுக்காக பேசுவார்கள், எங்களினுடைய மக்களின் உரிமைகளை கொண்டு செல்வார்கள் என்ற அடிப்படையில் உங்களுடைய தெரிவுகள் இருக்கும் என்று நான் நம்புகின்றேன்.

ஒட்டுமொத்தத்தில் இந்தத் தேர்தலுக்கான நீதிபதிகளாக தமிழர்களே அமைவதால் அவர்களுடைய வாக்குகள் சிதறிப் போகாமல் அது தமிழ்த் தேசியத்துக்கான தமிழ்த் தேசியத்தைப் பேசுகின்றவர்களுக்கான வாக்காக மாற வேண்டும்.

இப்போது யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் மட்டும் 44 தரப்புகளாக 396 பேர் 6 ஆசனங்களுக்காக களத்திலே இருக்கின்றார்கள். ஆகவே, தேர்தலில் வாக்குகள் சிதறடிக்கப்பட்ட இருக்கின்றன.

06



# இந்திய சுற்றுலாப் பயணிகள் அதிகளவானோர் வருகை

இந்த மாதத்தின் கடந்த 5 நாள்களில் மாத்திரம் 30 ஆயிரத்து 620 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குப் பிரவேசித்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்தியாவிலிருந்தே அதிகளவான சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்குப் பிரவேசித்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து 7,785 பேரும், ரஷ்யாவில் இருந்து 4,488 பேரும், ஜேர்மனியிலிருந்து 2,752 பேரும் நாட்டுக்குப் பிரவேசித்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 16 லட்சத்து 51 ஆயிரத்து 335 பேர் நாட்டுக்கு வந்துள்ளனர்.

## தமிழரசுக் கட்சியின்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

எங்கள் மக்களின் எண்ணங்கள் சிதறடிக்கப்பட்ட இருக்கின்றன. மக்களுடைய உணர்வுகள் மழுங்கடிக்கப்படும் நிலைகள் காணப்படுகின்றன. இவ்வாறான நிலையில் ஒட்டுமொத்த தமிழ் மக்களிடமும் கேட்பது வடக்கு, கிழக்கில், மலையகத்தில், கொழும்பில் வாழுகின்ற தமிழர்கள் தமிழ்த் தேசியத்துக்காக தமிழர்களுடைய உரிமைக்காக யார் யார் உரத்துக் குரல் கொடுக்கின்றார்களோ, யார் யார் தேவையென்று கருதுகின்றீர்களோ, அந்தவகையில் தமிழ்த் தேசியத்துக்காக உங்களுடைய வாக்குகள் அமைய வேண்டும் என்பது என்னுடைய மிகப்பெரிய வேண்டுகோளாகும்.

நான் மதுபானசாலைக்குப் சிபாரிசு செய்ததாகப் போலி ஆவணங்களைத் தயாரித்து எனக்கு எதிராக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வருவது கூட்டுச் சதியாகும். எங்களது கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும், சாவகச்சேரியைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவரும், கிழக்கிலே இருக்கின்ற ஒரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இணைந்து எனக்கு எதிராகத் திட்டமிட்ட கூட்டுச்சதியாகவே இந்த விடயத்தைக் கையாளுகின்றார்கள்.

இந்தக் கூட்டுச் சதி மக்களுக்கு மிகத் தெளிவாகவே தெரியும். மக்கள் அதைப் புரிந்துகொள்கின்றார்கள். யாராவது கூடுதலாக விருப்பு வாக்குகளை எடுத்து விடுவார்கள் அல்லது கட்சியை மீண்டும் கட்டியமைப்பதற்கு அவருக்கு ஓர் ஆணையை மக்கள் வழங்கிவிடுவார்கள் என்ற பயத்தில் கட்சிக்குள் இருக்கின்ற சில அநாமதேயமான சந்தேகப் பிறவிகளுடைய அல்லது தங்கள் மீது நம்பிக்கை இல்லாதவர்களே இந்த விடயத்தைக் கையாளுகின்றார்கள்.

எங்கள் மீது மதுபானசாலை இருப்பதாகக் குறிப்பிடும் இவர்கள் தங்களுடைய படத்துடன் என்னுடைய படத்தை இணைத்து கிளிநொச்சிக்குத் தபாலில் அனுப்புகின்றார்கள். நீங்கள் அவருக்கும் (எனக்கும்) போடுங்கோ, எங்கள் இருவருக்கும் போடுங்கோ என்று. இது ஒரு கேவலமான செயல் இல்லையா? மதுபானசாலை இருக்கு என்று கூறிக்கொண்டு எங்கள் படத்தைப் போட்டு வாக்கு கேட்கும் போக்கிலித்தனத்துக்கு ஏன் போகின்றீர்கள்? என்னுடைய அனுமதி இல்லாமல் மேற்கொள்ளும் இந்தச் செயற்பாடு கீழ்த்தரமான செயற்பாடாகும். வரலாறும் காலமும் இதற்குச் சரியான பதிலை வழங்கும்.

தமிழரசுக் கட்சியின் தலைவராக நான் தெரிவு செய்யப்பட்ட போது வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு மற்றும் புலம்பெயர் தேசங்களிலும் ஒரு எழுச்சி ஏற்பட்டிருந்தது. தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகத்துக்கு எதிராக வழக்குப் போட்டு தடுக்காது இருந்திருந்தால் எமது கட்சிக்கு யாழ்ப்பாணத்தில் 4 – 5 ஆசனங்களை அலுங்கல் – குலுங்கல் இல்லாமல் நாங்கள் எடுத்திருக்க முடியும்.

தங்களுடைய சுயநலத்துக்காகவே எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள், தங்களுடைய பதவி மோகங்களுக்காகத் தமிழ்த் தேசியத்தை அழித்து தமிழ் மக்களை வேறு திசைக்குக் கொண்டு செல்வதற்காக அவர்கள் செய்த கைங்கர்யம் தான் வழக்கு. அதன் காரணமாகத் தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகத்துக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. இடைக்காலத் தடை எப்போது விலக்கப்படுகின்றதோ அப்போது நான் தலைவராகப் பொறுப்பெடுப்பேன்.

அன்புக்குரிய மக்களிடம் நான் கேட்டுக்கொள்வது இம்முறை எனக்கு ஒரு ஆணை தாருங்கள். சிறீதரன் ஆகிய நான் திரும்பவும் தமிழரசுக் கட்சியின் தலைவராகப் பொறுப்பெடுத்து இந்தக் கட்சியை வழிநடத்தி, புலம்பெயர் நாடுகளில் இருக்கக்கூடிய தமிழர்களையும், நிலத்தில் இருக்கின்ற தமிழர்களையும் ஒருங்கிணைத்து வடக்கு – கிழக்கு, மலையகம், கொழும்பு என்று எங்கள் தமிழர்களை ஓரணியாக ஒன்றாக்கி, தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கும் எல்லாக் கட்சிகளையும் ஒரு பாதையில் கொண்டுவந்து, தேசிய விடுதலைக்கான இயக்கத்தை அமைப்பதற்கு என்னாலான முழு முயற்சிகளையும் மற்றவர்களையும் அரவணைத்து நான் செய்வதற்கு எனக்கொரு ஆணை தாருங்கள். மீண்டும் நான் தமிழரசுக் கட்சியின் தலைவராகப் பணியாற்றுவதற்கான ஆணையாக அது இருக்கட்டும் என எனது மக்களிடம் வினவி நிற்கின்றேன்.

தேர்தல் முடிந்த பிற்பாடு நான் கட்சியின் அடுத்த தலைமைத்துவத்தைப் பொறுப்பெடுப்பேன். வழக்குகள் ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்படும் என நினைக்கின்றேன். 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி 13 ஆம் திகதி வழக்கின் தவணை. மேலும் தவணைகள் போகும் வாய்ப்பு உள்ளது. இப்போதும் வழக்கைப் போட்டவர்கள் கைவாங்க முடியும். அவ்வாறு செய்தால் கட்சி மீண்டும் நல்ல நிலைக்கு வரும். மக்களிடம் கட்சி மீது நம்பிக்கை வரும். கட்சிக்குள் இருப்பவர்களே கட்சிக்கு எதிராக வழக்குப் போட்டிருக்கும்போது தமிழ் மக்களுடைய விடங்களை எப்படிப் பார்ப்பார்கள் என்ற கேள்வி மக்களிடம் எழுந்துள்ளது.

தற்போது மக்கள் யாவற்றுக்கும் தீர்ப்பு எழுதுகின்ற காலம். யார், யார் என்னென்ன கேவலங்களைச் செய்கின்றார்களோ, யார் யார் மக்களுக்கு எதிரான விரோதமான நடவடிக்கைகளை ஆற்றுகின்றார்களோ அவர்களுக்குத் தீர்ப்பு அளித்து அவர்களுக்கு உரிய தண்டனையை வழங்குகின்ற காலம் மக்களிடம் வந்திருக்கின்றது. மக்கள் எங்களிடம் கேள்வி கேட்கின்ற காலம் போய் மக்கள் நீதிபதிகளாக மாறி இருக்கின்றார்கள். உங்களுடைய நீதிக்காக எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி கடந்து 15 ஆம் திகதி வரக் காத்திருக்கின்றோம்." – என்றார்.




# திரிபோஷா நிறுவனத்தைக் கலைக்க நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது

திரிபோஷா நிறுவனத்தினை கலைக்கவோ அல்லது வேறு நிறுவனங்களுடன் இணைக்கும் நடவடிக்கையோ மேற்கொள்ளப்பட மாட்டாது என நிதியமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு திரிபோஷா வழங்கும் திட்டம் மேலும் பலனளிக்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் திரிபோஷ நிறுவனத்திற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் வலுவான அமைப்பாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நிதியமைச்சு குறிப்பிடப்பட்டுள்ளது.

# சீன அரசினால் வழங்கப்பட்ட நிதி உதவி திறைசேரிக்கு அனுப்பப்பட்டது

இயற்கை அனர்த்தங்களால் சேதமடைந்த வீடுகள் மற்றும் சொத்துக்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக சீன அரசினால் வழங்கப்பட்ட சுமார் 30 மில்லியன் ரூபா நிதி உதவி திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி வரை ஏற்பட்ட சேதங்களுக்காக இந்த இழப்பீடு வழங்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இயற்கை அனர்த்தங்களினால் சேதமடைந்த மக்களின் வீடுகளை புனரமைப்பதற்காக தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திலிருந்து பாதுகாப்பு அமைச்சுக்கு மேலதிக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம் அந்த நிதியை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கியுள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் போதுமான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படாததால், அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியிருந்தது.

மேலும், அவசரகால மனிதாபிமான உதவித் திட்டத்தின் கீழ் சீன மக்கள் குடியரசில் இருந்து கிடைக்கவுள்ள 10 மில்லியன் யுவான் பொருள் உதவி மற்றும் பொருட்கள் பெறப்பட்டவுடன் முறையான கணக்குப்பதிவுக்குப் பிறகு விநியோகிக்கப்பட உள்ளன.

மேலும், சேதமடைந்த வீடுகள் மற்றும் உடைமைகளுக்கான இழப்பீட்டுத் தொகையை வழங்குதல், வீடுகளின் கட்டுமானம் மற்றும் மறுசீரமைப்புப் பணிகளையும் அனர்த்த நிவாரணம் மற்றும் கண்காணிப்புத் திட்டத்தின் ஊடாக விரைவாக நிறைவேற்றவும், தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2024

“நீங்கள் வலிமை, பொறுமை ஆகிய வற்றின் அருமையை உணர்வீர்களாயின் மரங்களின் சகவாசத்தை வரவேற்பீர்கள்.”

- ஹால் போரல்ாண்ட்

(அமெரிக்க இயற்கையியலாளர்)



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பேரிடர் மத்தியில் வாக்களிப்பு

இன்னும் நான்கு நாள்களில் பொதுத்தேர்தல் வாக்களிப்புத் தினம். தேர்தல் பிரசார சூறாவளி மும்முரம் கொண்டிருக்கும் அதே நேரம் காலநிலை மாற்றமும் சூறாவளி போன்ற நெருக்கடிகளைத் தீவிரமாகத் தரலாம் என்ற அச்சம் அதிகாரிகளுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

நாடு முழுவதும் பருவ காலமழை கொட்டி வருகிறது. இந்தப் பின்புலத்தில் பேரிடர் சூழல் ஏதும் ஏற்படாமல் பொதுத் தேர்தலை நடத்தி முடிக்க முடியுமா என்ற அச்சம் அதிகாரிகளுக்கு ஏற்பட்டிருப்பது நியாயமானது தான்.

அவ்வாறான நெருக்கடிகள் ஏற்பட்டால், அந்த இடர்களுக்கு மத்தியிலும் திட்டமிட்டபடி தேர்தலை வெற்றிகரமாக நடத்தி முடிப்பது எவ்வாறு என்பது குறித்து அதிகாரிகள் பேரிடர் முகாமைத்துவ மையத்துடன் உரையாடி கூடுதல் திட்டங்களை செயல்படுத்தத் தயாராகி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுத் தேர்தல் வாக்களிப்பை நடத்தி முடிப்பதற்கான சாத்தியமான சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். அது குறித்து பேரிடர் முகாமைத்துவ மையத்துடன் தேர்தல் ஆணையம் நேற்று முன்தினம் விரிவான ஆராய்வுக் கூட்டம் ஒன்றை நடத்தி இருப்பதாகவும் தெரிய வருகிறது.

நாடு முழுவதும் பெய்து வரும் மழை அடுத்து வரும் நாள்களில் ஓரளவு தணியும் என்று காலநிலை தொடர்பான எதிர்கூறல் அறிக்கைகள் குறிப்பிட்டாலும், நிலைமைகள் எந்த நேரத்திலும் மோசமடையக் கூடிய வாய்ப்புகள் இல்லாமல் இல்லை என்றும் சுட்டப்படுகின்றது.

இதனால் ஏற்படக்கூடிய எந்த நெருக்கடிக்கும் முகம் கொடுத்து, தேர்தலை தங்கு தடையின்றி நடத்தி முடிப்பதில் தேர்தல் ஆணையம் குறியாக இருப்பதாகவும், அதற்கான எல்லாவிதமான ஆயத்தங்களையும் தேர்தல் ஆணையம் செய்வதாகவும் ஆணைய வட்டாரங்கள் தெரிவித்தன.

வாக்களிப்பு நாளில் மழை ஏதேனும் பகுதிகளில் அல்லது பரவலாக கொட்டி தீர்க்குமாயின் உரிய நேரத்தில் வாக்காளர்கள் வாக்குச்சாவடிகளுக்கு சென்று திரும்புதல், வாக்குப் பெட்டிகளை வாக்களிப்பு நிலையங்களுக்குக் கொண்டு போய்த் திருப்பிக் கொண்டு வருதல் போன்றவை தொடர்பில் உரிய முன்னாயத்த நடவடிக்கைகள் குறித்து இப்போது ஆராயப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

கடும் மழை, வெள்ளம் போன்றவற்றுக்கு மத்தியில் வாக்காளர்களின் போக்குவரத்துக்கும் வாக்குப் பெட்டிகளின் பாதுகாப்பான நகர்வுக்கும் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நெருக்கடிகளை எதிர்கொள்வதற்காகத் தேவைப்படுமானால் படகுகள், ஹெலிக்கொப்டர்களை பயன்படுத்துவதற்கான தயார் நிலை குறித்தும் விரிவாக ஆராயப்பட்டிருக்கின்றது.

வானிலையின் போக்குப் பற்றிய எதிர்வுகூறல்களை தேர்தல் அதிகாரிகள் ஊன்றிக் கவனித்து, தீர்மானங்களை முன்கூட்டியே எடுக்க இருக்கின்றனர் என்றும் கூறப்பட்டது.

களுத்துறை, இரத்தினபுரி, மாத்தறை மற்றும் காலி போன்ற மாவட்டங்கள் வாக்களிப்பு சமயத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன எனவும் தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

நாடு முழுவதிலும் ஒரே சமயத்தில் பொதுத் தேர்தல் வாக்களிப்பு நடக்க இருக்கையில், நாட்டின் எல்லா மக்களுக்கும் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் சூழ்நிலை ஒரே மாதிரியாக வழங்கப்பட வேண்டும் என்று சுயாதீன தேர்தல் கண்காணிப்பு வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

மழை நிலைமை மோசமாக இருக்கும் என்று எதிர்வு கூறப்பட்டால் - இலங்கை முழுவதும் ஒரே விதமான வழமை நிலை நிலவும் என்ற உறுதிப்பாடு இல்லாவிட்டால் - வாக்களிப்பை திட்டமிட்ட தினத்தில் நடத்தி முடிப்பதா அல்லது நெருக்கடிகளை கருத்தில் கொண்டு தேவையாயின் ஒரு சில நாள்கள் முன்பின் வாக்களிப்பை தள்ளி வைப்பதா என்பது குறித்தெல்லாம் தேர்தல் ஆணையம் தேர்தல் நெருங்கின்ற சமயத்தில் தீர்மானங்களை எடுக்கும் என்றும் கூறப்படுகின்றது.

எது, எப்படியாயினும், அடுத்த ஐந்து வருடங்களுக்கு நாட்டை வழிநடத்தப் போகின்ற நாடாளுமன்றத்தை மக்கள் இந்தத் தேர்தல் வாக்களிப்பு மூலம் தேர்வு செய்யப் போகிறார்கள். அத்தகைய தெரிவில் நாடு முழுவதும் உள்ள வாக்காளர்கள் தங்கள் வாக்கைப் பிரயோகிப்பதற்கு ஒரே விதமான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். சில பகுதிகள் மோசமான மழை வெள்ளத்தில் மூழ்கி, மக்கள் வாக்களிப்பு குறித்தே சிந்திக்க முடியாத நிலை இருக்குமாயின், முழு நாட்டுக்குமான தேர்வுகளை சுமுக நிலையில் நடத்துவதற்கான ஒரு திகதிக்கு அதை ஒத்தி வைப்பது கூட நல்ல யோசனையாக இருக்கும். தேர்தல் ஆணையம் இவ்விடயத்தில் விசால கருத்தோடு சிந்தித்து ஒரு நியாயமான முடிவை எடுத்து வைத்திருக்க வேண்டும்.

# யார் புதிய புதிய கட்சிகளை தொடங்கினாலும் விடுதலை சிறுத்தையை போட்டியாக முடியாது

## திருமாவளவன் தெரிவிப்பு

“யார் புதிய புதிய கட்சிகளை தொடங்கினாலும், எவ்வளவு பெரிய புகழ் பெற்றவர்களாக இருந்தாலும் அவர்கள் விடுதலை சிறுத்தைகளுக்கு போட்டியாக வர முடியாது. நம் களம் முற்றிலும் வேறானது. இந்தக் களத்தில் யாரும் நம்மோடு போட்டிக்கு வரமுடியாது,”

– இவ்வாறு வி.சி.க. தலைவர் திருமாவளவன் கூறியுள்ளார்.

திண்டிவனத்தில் வெள்ளிக்கிழமை இரவு நடந்த வி.சி.க. நிர்வாகியின் இல்ல நிகழ்வில் வி.சி.க. தலைவர் தொல். திருமாவளவன் பங்கேற்றார். அந்த நிகழ்வில் அவர் உரையாற்றுகையில்,

“ஒரு ஊரில் ஒரு கொடியை ஏற்றுவது என்பதே நமக்கு யுத்தம், பொலிஸ் அனுமதிக்காது. அந்தப் பகுதியில் இருக்கிற மற்ற அரசியல் அமைப்புகளின் எதிர்ப்பு. அவ்வளவு எளிதாக ஒரு கொடியை நம்மால் ஊன்றிவிட முடியாது. ஒவ்வொரு மாவட்டத்திலும் கொடி ஊன்றுவதில் நமக்கு பெரும் போராட்டங்கள் இருந்திருக்கிறது.

கடலூர் மாவட்டத்தில் எண்ணற்ற நிகழ்வுகள். இது அண்மைக் காலமாக மட்டுமல்ல தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. இப்போதுதான் உள்ளாட்சி அமைப்புகளில் வெற்றி பெறுவதற்கான சூழலைச் சந்தித்து வருகிறோம். கடுமையான நெருக்கடிகள் எல்லாம் கடந்து பயணித்து வருகிறோம்.

நாங்கள் இடம்பெற்றிருக்கக் கூடிய கூட்டணியில் அங்கம் வகிக்கின்ற தி.மு.கவை விமர்சிக்கும் போது அதற்கு நான் பதில் சொல்லவில்லை என்றால் நான் இந்தக் கூட்டணியில் எதற்கு நீடிக்கிறேன் என்பதே கேள்விக்குறியாக மாறும். தி.மு.கவுக்காக சொல்லவில்லை, அந்த அணியில் இடம் பெற்றிருக்கும் விடுதலை சிறுத்தைகளுக்காக பதில் சொல்கிறோம். நாங்கள் வளரும் நிலையில் இருக்கிறோம். கொள்கை பிடிப்போடு இருக்கிறோம். அங்கே போனால் வளரலாமா, இங்கே போனால் வளரலாமா என்று ஒரே நேரத்தில் பேரம் பேசி அரசியல் செய்யவில்லை. அது எங்களுக்கு தேவை இல்லை.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஒரு அரசியல் சக்தியாக பரிணமித்திருக்கிறது. அனைத்துத் தரப்பினரும் ஆதரிக்கக் கூடிய பேரியக்கமாக உள்ளது. கொள்கைப் பிடிப்போடு இருந்தால் தான் எத்தனை சதி முயற்சிகள் நடந்தாலும் அதனை முறியடிக்க முடியும் என்பதற்கு தி.மு.க. ஒரு சான்று. இது தி.மு.கவுக்கு வக்காலத்து வாங்குவது அல்ல. இது நமக்கு ஒரு பாடம். தி.மு.க. சந்தித்த நெருக்கடிகள் எல்லாம் அரசியல் களத்தில் விவரிக்கவே முடியாது. ஆனால், நாம் சந்தித்த நெருக்கடிகள் வேறு அது தி.மு.கவுக்கு கிடையாது.



விஜயகாந்த் அரசியலுக்கு வந்தபோது, இந்தக் கட்சிகள் எல்லாம் காணாமல் போய்விடும் என கூறினார்கள். இன்றைக்கு விஜய் வந்தவுடன் எவ்வளவு பயங்கரமான ஹைப். நம் மாநாட்டுக்கு எத்தனை லட்சம் பேர் வந்தார்கள், இத்தனை முக்கியத்துவம் கொடுத்து விவாதித்தார்களா? சினிமா ஹீரோவாகக்கூட இல்லை, திருமாவளவனால் எப்படி இத்தனை லட்சம் பேரை கூட்ட முடிந்தது என விவாதித்தார்களா? இது இந்தியா முழுக்கவே அப்படித்தான் உள்ளது.

ஆனால், 12 மணி... 1 மணி ஆனாலும் விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் காத்துக் கிடக்கின்றனர். விஜய் ஆர்கானிக் மாஸ் என்கிறார்கள். அப்படியானால் வி.சி.க. என்ன இன்–ஆர்கானிக் மாஸா? திருமாவளவன் தலைமையில் ஆட்சி அமையும் என யாரேனும் விவாதித்தார்களா? திருமாவளவன் தலைமையில் கூட்டணி அமையும் என யாரேனும் சொன்னார்களா? நான் அப்படிச் சொல்ல வேண்டும் என்று ஆசைப்படவில்லை, இதுதான் இந்த சமூகம். இப்படித்தான் நம்மை குறைத்து மதிப்பீடு செய்கிறார்கள்.”– என்றார்.

# பிரச்சாரங்களில் ராகுல் காந்தி காட்டும் அரசியல் சாசன புத்தகம் போலியானது

## அமித் ஷா கண்டனம்

“தேர்தல் பிரச்சாரங்களின்போது ராகுல் காந்தி காட்டும் அரசியல் சாசன புத்தகம் போலியானது. அதன் உள்ளே எதுவுமே இல்லை.”

– இவ்வாறு பா.ஜ.க. மூத்த தலைவரும் மத்திய உள்துறை அமைச்சருமான அமித் ஷா தெரிவித்துள்ளார்.

ஜார்க்கண்ட் சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு பாலமு நகரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அமித் ஷா,

“தேர்தல் பிரச்சாரங்களின்போது ராகுல் காந்தி அரசியல் சாசன புத்தகத்தைக் காட்டுகிறார். ஆனால், அந்த புத்தகம் உண்மையில் அரசியல் சாசன புத்தகம் அல்ல. இவ்விஷயத்தில் இரண்டு நாள்களுக்கு முன் அவர் அம்பலமானார்.

ராகுல் காந்தி காட்டும் அரசமைப்பு சட்ட புத்தகத்தின் பிரதி ஒன்றை ஒருவர் பெற்றுள்ளார். எந்த உள்ளடக்கமும் இல்லாத அந்த புத்தகத்தின் அட்டையில் இந்திய அரசியலமைப்பு என்று எழுதப்பட்டுள்ளது. ராகுல் காந்திக்கு நான் ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசமைப்புச் சட்டத்தை கேலிக்கூத்தாக்காதீர்கள். இது அரசியல் சாசனத்தின் நம்பிக்கை பற்றியது. அரசியல் சட்டத்தின் போலி பிரதியை காட்டுவதன் மூலம் நீங்கள் அம்பேத்கரையும், அரசியல் நிர்ணய சபையையும் அவமதித்து விட்டீர்கள். காங்கிரஸ் கட்சி அரசமைப்பை கேலிக்கூத்தாக்கியுள்ளது. ஆனால், பிரதமர் நரேந்திர மோடி நவம்பர் 26 ஆம் திகதியை அரசமைப்பு தினமாகக் கடைப்பிடிக்க முடிவு செய்துள்ளார்.

ஓ.பி.சி, பழங்குடியினர் மற்றும் தலித்துகளின் இடஒதுக்கீட்டைப் பறிக்கும் கெட்ட நோக்கம் காங்கிரஸுக்கு உள்ளது. ஓ.பி.சி. ஒதுக்கீட்டிற்கு காங்கிரஸ் எதிரானது. மகாராஷ்டிராவில் உலமாக்களின் பிரதிநிதிகள் காங்கிரஸ் தலைவர்களை சந்தித்தபோது, சிறுபான்மையினருக்கு 10 வீத இடஒதுக்கீடு வழங்குவதாக அக்கட்சி வாக்குறுதி அளித்துள்ளது. மத அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்கப்படுவதை பா.ஜ.க. ஒருபோதும் அனுமதிக்காது.



காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி. உங்களின் நான்காவது தலைமுறை கூட, சட்டப்பிரிவு 370ஐ மீண்டும் கொண்டு வர முடியாது என்று ராகுல் காந்தியை நான் எச்சரிக்கிறேன். ஜார்க்கண்டில் உள்ள ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா தலைமையிலான அரசு, நாட்டிலேயே மிகவும் ஊழல் நிறைந்த அரசாக உள்ளது.” – என்றார்.



# புலம்பெயர்நதோர் தங்கியிருந்த கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் 7 பேர் உயிரிழப்பு

லிபியதலைநகர்திரிபோலிக்குமேற்கேஉள்ளஜான்சூர்மாவட்டத்தில் புலம்பெயர் தொழிலாளர்கள் தங்கியிருந்த கட்டடம் நேற்று முன்தினம் அவர்கள் தூங்கிக்கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானது.

கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டவர்களை அக்கம்பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதித்தனர்.

எனினும், கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி பெண்கள், குழந்தைகள் உட்பட 7 பேர் உயிரிழந்தனர். அவர்கள் ஆபிரிக்காவை சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது. மேலும் சிலர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து தொடர்பாக வழக்குப்பதிவு செய்துள்ள பொலிஸார், விசாரணை நடத்தி வருகின்றனர்.











# பாகிஸ்தான் ரயில் நிலைய தற்கொலை படை தாக்குதலில் உயிரிழப்பு 26 ஆக அதிகரிப்பு

பாகிஸ்தானின் குவெட்டா ரயில் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற தற்கொலைப் படை தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 26 ஆக அதிகரித்துள்ளது. இதில், 16 இராணுவ வீரர்களும் அடங்குவர். இந்தச் சம்பவத்தில் இதுவரை 62 பேர் காயமடைந்துள்ளனர்.

பலுசிஸ்தான் மாகாண தலைநகர் குவெட்டாவில் உள்ள ரயில் நிலையத்தில் பாகிஸ்தான் இராணுவ வீரர்களை குறிவைத்து நேற்று தற்கொலைப் படை தாக்குதல் நடத்தப்பட்டது. குவெட்டா ரயில் நிலையத்தில் ஏராளமான இராணுவ வீரர்கள் காத்திருந்தனர். அப்போது பெஷாவர் செல்லும் எக்ஸ்பிரஸ் ரயில் வந்தது. அந்த ரயிலில் இராணுவ வீரர்கள் ஏற முயன்றனர். அவர்களை குறிவைத்து கூட்டத்தில் இருந்த தற்கொலைப் படை தீவிரவாதி வெடித்துச் சிதறினார்.

இதில் 16 இராணுவ வீரர்கள் உட்பட 26 பேர் உயிரிழந்தனர். 46 இராணுவ வீரர்கள் உட்பட 62 பேர் படுகாயம் அடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். பலுசிஸ்தான் விடுதலைப் படை என்ற தீவிரவாத அமைப்பு தற்கொலைப் படை தாக்குதலுக்கு பொறுப்பேற்று உள்ளது. இராணுவ வீரர்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் 4 மாகாணங்களில் ஒன்று பலுசிஸ்தான். இது, அந்த நாட்டின் நிலப்பரப்பில் 48 சதவீதத்தை கொண்டுள்ளது. எண்ணெய் வளம், இயற்கை எரிவாயு, நிலக்கரி, செம்பு, தங்க சுரங்கம் என இயற்கை வளங்கள் நிறைந்த பலுசிஸ்தான் மாகாணத்தின் வளங்களை பாகிஸ்தான் அரசு சுரண்டுகிறது. அந்த மாகாண மக்கள் வறுமையில் வாடுகின்றனர். இந்தியா, பாகிஸ்தான் சுதந்திரம் அடைந்த காலத்தில் கலாட் (பலுசிஸ்தானின் பழைய பெயர்) தன்னை தனி நாடாக அறிவித்தது.

கடந்த 1948 ஆம் ஆண்டு மார்ச் 27 ஆம் திகதி கலாட் பகுதியை பாகிஸ்தான் இராணுவம் ஆக்கிரமித்தது. அப்போது முதல் பலுசிஸ்தான் மக்கள் பாகிஸ்தான் அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தி வருகின்றனர். பல்வேறு கிளர்ச்சி குழுக்கள் பாகிஸ்தான் அரசுக்கு எதிராக ஆயுத போராட்டத்தை நடத்தி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.







# தமிழ் மக்களின் வாக்குகளை நுட்பமாக வேட்டையாடும் முஸ்லிம் தலைமைகள்!

## வன்னி மாவட்ட வேட்பாளர் எமில்காந்தன் எச்சரிக்கை




(கி.வசந்தன்)

“தமிழ் வேட்பாளர்களை முன்னிலைப்படுத்தி முஸ்லிம் வேட்பாளர்களை உள்நுழைத்துத் தமிழ் மக்களின் வாக்குகளை வேட்டையாட முஸ்லிம் அரசியல்வாதிகள் திட்டமிட்டுள்ளனர். எனவே, தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.”

– இவ்வாறு வன்னி தேர்தல் மாவட்டத்தில் கோடரி சின்னத்தில் சுயேச்சையாகப் போட்டியிடும் வேட்பாளர் எமில்காந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வன்னியில் கடுமையான ஒரு போட்டி நிலவுகின்ற இந்த நேரத்தில் தமிழ் மக்களிடம் நாங்கள் அன்பான ஒரு வேண்டுகோளை விடுக்கின்றோம். கடந்த 15 வருட கால அரசியலில் தமிழர்களின் உரிமைக்காக அரசியல் செய்து வந்த கட்சிகள் தங்களது தனிப்பட்ட அதிகாரத்திற்கும் பதவிகளுக்கும் போட்டியிட்டு தமிழ் மக்களைத் தலைமையற்ற சமூகமாக நடுத்தெருவில் விட்டுச் சென்றுள்ளனர்.

அந்த அதிகாரப் போட்டியில் இரண்டாக பிரிந்து இரண்டுக்கும் தலைமை இல்லாமல் மக்களை பிழையாக வழிநடத்தி விட்டு மீண்டும் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

விசேடமாக வன்னி மாவட்டத்தில் இந்த 15 வருட அரசியலில் முஸ்லிம் அரசியல்வாதிகள் களநிலவரங்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் நிலைமை இருந்துள்ளதைப் பார்க்கின்றோம்.

தமிழ் மக்களை விட குறைவான வாக்குகளைக் கொண்டுள்ள முஸ்லிம்கள் தமது அரசியல் தேவையை தமிழ் மக்களின் மீது பயணம் செய்தே பெற்றுக்கொள்கின்றனர். இந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் புதிய வியூகங்களை அமைத்து தமிழ் வேட்பாளர்களை உள்வாங்கி தமது வாக்குவேட்டையை அவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

தமிழ் வேட்பாளர்களை முன்னிலைப்படுத்தி முஸ்லிம் வேட்பாளர்களை உள்நுழைந்து தமிழ் வாக்குகளைப் பயன்படுத்த அவர்கள் திட்டமிட்டுள்ளனர். தமிழர்கள் எந்த வகையில் வாக்களித்தாலும் முஸ்லிம்கள் தமது பிரதிநிதிகளை நாடாளுமன்றம் அனுப்பும் நோக்குடன் கட்சிதமாக அவர்கள் செயலாற்றி வருகின்றனர்.

எனவே, தமிழ் மக்கள் எந்தக் கட்சிக்கு வாக்களிக்கப் போகின்றீர்கள்? அது எத்தகைய வேட்பாளர்களைக் கொண்டுள்ளது? அதில் தமிழர்கள் முற்றுமுழுதாக உள்ளார்களா? அவர்கள் புதிய முகங்களா? அனுபவம், ஆற்றல் உள்ளவர்களா? என்பதை நன்கு அறிந்து கொள்ளுங்கள்.

அவர்களது கொள்கையும் சித்தாந்தமும் மிக முக்கியமானது. சிலர் பழைய சித்தாந்தங்களுடன் புதிய முகங்களைக் காட்டி வாக்குக் கேட்டு வந்துள்ளனர்.

வன்னித் தேர்தல் களம் முக்கியமானது. இங்கு அனைத்துத் துறைகளிலும் தமிழ் மக்கள் பலங்குன்றியே உள்ளனர். வவுனியா நகரத்தின் பொருளாதாரக் கட்டமைப்பும் ஆதிக்கமும் முஸ்லிம்களின் கைகளில் உள்ளது. அதற்கேற்றவாறாக முஸ்லிம் அரசியல்வாதிகள் தமது மக்களுக்குத் தேவையானதைச் செய்து கொடுத்துள்ளனர்.

கடந்த காலத்தில் இந்தப் பகுதியை சேர்ந்த இரண்டு முஸ்லிம்கள் அமைச்சர்களாகவும் இருந்துள்ளனர். அவர்களுக்குத் தமிழ் மக்கள் ஏதோவொரு விதத்தில் வாக்களித்ததை அந்தத் தரப்புகள் சாதகமாகப் பயன்படுத்தியதன் விளைவே அது.

இந்த விளைவை 15 வருடங்களாகக் கண்டு கொண்ட தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கு வன்னி மக்கள் மீது அக்கறை இருந்ததாகத் தெரியவில்லை. இம்முறையும் இதே நிலைப்பாட்டை முஸ்லிம் அரசியல்வாதிகள் கையில் எடுத்து இரண்டுக்கும் மேற்பட்ட உறுப்பினர்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் நுட்பமான முறையில் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளனர்.

கோடரிச் சின்னத்தில் சுயேச்சையாகப் போட்டியிடும் நாங்கள் சமூக அக்கறை கொண்டவர்களை, வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளோம். எனவே, தலைமைத்துவம் இல்லாத இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் நீங்கள் வாக்களிக்கக் கூடாது. முஸ்லிம் பிரதிநிதிகளை உள்ளடக்கிய கட்சிகளையும் புறந்தள்ளி எமது கோடரிச் சின்னத்துக்கு வாக்களித்து வன்னி மண்ணைப் பாதுகாக்குமாறு உங்களிடம் வேண்டி நிற்கின்றோம்.” – என்றார்.






# அஸ்வெசும கொடுப்பனவு நாளைமுதல் வழங்கப்படும்

அஸ்வெசும பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் நவம்பர் மாதத்துக்கான அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு தொகையை நாளை முதல் வரவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும நலன்புரி நன்மைகள் சபை இதனைத் தெரிவித்துள்ளது.

இதன்படி நாளை மறுதினம் செவ்வாய்கிழமை முதல் அஸ்வெசும பயனாளிகள் தங்களது வங்கிக் கணக்குகளிலிருந்து கொடுப்பனவு தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாத்தறை வெள்ளப்பெருக்கு பிரச்சினைக்கு உடனடி தீர்வு; ஜனாதிபதியின் செயலாளர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்



மாத்தறை நில்வலா ஆற்றில் கட்டப்பட்டுள்ள உப்பு நீர் தடுப்பு, அப்பகுதியில் வெள்ளப்பெருக்கு அதிகரிப்பதற்கு காரணமாக இருப்பதாகவும், விளைச்சல் நிலங்களுக்குள் கடல்நீர் வருவதால், பயிர்கள் சேதமடைவதாகவும் அப்பகுதி மக்கள் மற்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து, உடனடித் தீர்வுகளை வழங்குவது தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று , ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நீர்ப்பாசன மற்றும் நீர் வழங்கல் சபை அதிகாரிகளுக்கு இடையில் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

அங்கு, உப்பு நீர் தடுப்பு கட்டப்பட்டதால், வெள்ள நிலைமை மற்றும் விவசாய நிலங்களுக்கு உப்பு நீர் வரும் நிலை ஏற்படுகின்றதா என்பதையும் அதற்கான நிரந்தரத் தீர்வுகளை வழங்குவது முறையான ஆய்வுக்குப் பின்னரே செய்யப்பட வேண்டும் என்றும் அந்த நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தி வருகை தந்திருந்த பொறியாளர்கள் தீர்மானித்தனர்.

இது தொடர்பில் ஆராய்ந்து தீர்வுகளை முன்வைப்பதற்காக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பிரிவின் ஆதரவைப் பெறுவதற்கு முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு ஜனாதிபதியின் செயலாளர் ஒப்புதல் வழங்கினார்.

அத்துடன், இதற்கான பரிந்துரைகளை தயாரிக்குமாறு ஆலோசனை வழங்கிய கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பிரிவினால் மேற்கொள்ளப்படும் ஆய்வறிக்கையின் அடிப்படையில் அதற்கான தீர்வை வழங்குமாறும், அந்தப் பணிகளை திட்டத்தின் இரண்டாம் கட்டமாக நடைமுறைப்படுத்துமாறும் மேலும், அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டுக் கோரிக்கையை சமர்ப்பிக்குமாறும் அறிவுறுத்தல் வழங்கினார்.

மாத்தறை மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்துவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட வேண்டுமெனவும், அந்த வேலைத்திட்டத்தை நீர்ப்பாசனம் மற்றும் நீர்வழங்கல் சபை இணைந்து நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும் ஜனாதிபதியின் செயலாளர் இதன்போது வலியுறுத்தினார்.

மேலும், மாத்தறை பிரதேசத்தில் ஏற்படும் வெள்ளப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணுமாறு அதிகாரிகளுக்கு இதன்போது அறிவுறுத்தப்பட்டுள்ளது.



# நாட்டின் பல பகுதிகளில் இன்று இடியுடன் மழை

வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் திருகோண மலை மாவட்டத்திலும் இன்று இடைக்கிடையே மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அத்துடன் மத்திய, ஊவா மற்றும் தென் மாகாணங்களின் சில பகுதிகளில் மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

அதேநேரம் மேல், சபரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் இன்று காலை பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படலாம்.

இதேவேளை, இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாகப் பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.




# பல்கலைக்கழகங்களுக்கு விடுமுறை அறிவிப்பு

2024 ஆம் ஆண்டுக்கான பொதுத் தேர்தலைக் கருத்தில் கொண்டு அனைத்து பல்கலைக்கழகங்களும் எதிர்வரும் 13 மற்றும் 14ஆம் திகதிகளில் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பொதுத் தேர்தலை முன்னிட்டு எதிர்வரும் 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படவுள்ளது.

தேர்தல் ஆணைக்குழு விடுத்த கோரிக்கைக்கு அமைய, இரண்டு நாட்களும் விடுமுறை வழங்கப்படுவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, பாடசாலை கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 18 ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.




# பேரம் பேசும் சக்தியை அதிகரிக்க தமிழரசுக் கட்சிக்கு வாக்களியுங்கள்

## கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை

எமது பேரம் பேசும் சக்தியை அதிகரிக்க தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வாக்களியுங்கள் என கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர் தாயக உறவுகளை ஊடக அறிக்கை மூலம் கோரியிருக்கின்றது.

அந்த அமைப்பின் ஊடக அறிக்கையில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

அன்பான தமிழர் தாயக உறவுகளே!

இலங்கையின் 17 ஆவது நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்கு இன்னும் சில நாள்களே எஞ்சியிருக்கின்றன. இனச்சிக்கலுக்கு தமிழினத்துக்குரிய உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு நியாயமான, நீதியான, நிலைத்து நிற்கக் கூடிய அரசியல் தீர்வை எட்டும் வரை எல்லாத் தேர்தல்களும் எமக்கு முக்கியமானவையே.

இந்தத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி (இ.த.அ.க.) தனித்தே போட்டியிடுகிறது. த.தே.கூ. இல் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிகள் தாமாகவே கூட்டமைப்பில் இருந்து ஜனவரி 2023 இல் வெளியேறிவிட்டன.

தமிழ் மக்களாகிய நீங்கள் 1956 தொடக்கம் இராணுவ நெருக்குவாரம், ஒட்டுக் குழுக்களின் அடாவடித்தனங்கள் போன்றவற்றைத் தாண்டி ஒவ்வொரு தேர்தலிலும் ஈழத் தமிழர்களின் முதன்மைக் கட்சியான இ.த.அ.கட்சிக்கு வாக்களித்து எமது இனத்தின் அரசியல் பிரநிதித்துவத்தைப் பலப்படுத்தி வந்திருக்கிறீர்கள்.

சென்ற செப்ரெம்பர் 21 இல் நடந்த ஜனாதிபதி தேர்தலில் ஊடகங்களின் பலத்த எதிர்மறைப் பரப்புரைக்கு மத்தியிலும் இ.த.அ.க. ஆதரித்த ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு நீங்கள் வாக்களித்து வடகிழக்கில் உள்ள 5 தேர்தல் மாவட்டங்களிலும் 676,681 (43.03 விழுக்காடு) வாக்குகள் எடுத்து முதல் இடத்துக்கு வர வைத்தீர்கள். அதே நேரம் சர்வதேசத்துக்குப் புதிதாக தமிழ்மக்கள் ஒரு வலுவான செய்தியைச் சொல்ல வேண்டும் எனக் கூறிய போலித் தேசியவாதிகள் நிறுத்திய தமிழ் வேட்பாளர் பா. அரியநேத்திரன் 218,479 (13.67 விழுக்காடு வாக்குகள் மட்டும் எடுத்து 4 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டார்.

தென்னிலங்கையில் ஒரு பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்கது. தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் அநுர குமார திஸ்நாயக்க 5,740,179 (42.31 விழுக்காடு வாக்குகள் பெற்று சனாதிபதியாக வந்துள்ளார். தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் அறிக்கையில் 13ஏ சட்ட திருத்தத்தை முழுதாக நடைமுறைப் படுத்துவது பற்றி நேரடியாக எதனையும் சொல்லவில்லை. தேர்தல் காலத்தில் மாகாண சபைகளுக்கு காணி, காவல்துறை அதிகாரங்கள் வழங்கப்பட மாட்டாது என்ற பொருள்படவே ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க பேசியிருந்தார். ஆனால் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கையில் நல்லாட்சி அரசாங்க காலத்தில் (2015-2019) முன்னெடுக்கப்பட்ட புதிய அரசமைப்பு வரைவை அடிப்படையாகக் கொண்டு அது நிறைவு செய்யப்படும் எனக் குறிப்பிட்டிருக்கிறது.

இருந்தும் ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் ஆளும் தரப்பில் இருந்து வரும் செய்திகள் தமிழ்மக்களுக்கு நம்பிக்கை தருவனவாக இல்லை. மக்கள் விடுதலைக் கழகத்தின் (ஜே.வி.பி.) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா "13 ஆவது திருத்தச் சட்டமும் அதிகாரப்பகிர்வும் வடக்கு மக்களுக்கு அவசியமானவை அல்ல, அவர்களுக்கு அவர்களின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வே அவசியமாக உள்ளது. ஆனால் தமிழ் அரசியல்வாதிகள் தங்களது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக இந்த விடயங்களை பயன்படுத்தி வருகின்றனர்" என்று பொதுவெளியில் தெரிவித்துள்ளார். இது போன்ற கருத்தை அமைச்சரவைப் பேச்சாளர் விஜித்த ஹேரத்தும் கூறியிருக்கிறார்.

மேலும் போர்க்காலத்தில் இடம் பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக இராணுவ அதிகாரிகள் எவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள் எனத் திட்டவட்டமாக தேசிய மக்கள் சக்தி கட்சி தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை நிறைவேற்றிய தீர்மானம் 50/1 ஐ நிராகரித்துள்ளார்கள். அதே போன்று ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் சர்வதேச விசாரணைக் கோரிக்கையையும் புறந்தள்ளியுள்ளார்கள். சுருங்கச் சொன்னால் அதி தீவிர சிங்கள – பௌத்த கடும்போக்காளரான மஹிந்த ராஜபக்ஷவின் பேரினவாத கோட்பாட்டையே எழுத்துப் பிசகாமல் அநுர குமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் பின்பற்றுகிறது – பின்பற்றும் – எனக் கொள்ளலாம்.

ஜே.வி.பி. கட்சி நீண்ட காலமாகவே அதிகாரப் பகிர்வை எதிர்த்து வருகிறது. மாகாண சபைகளுக்கு காணி மற்றும் காவல்துறை அதிகாரங்கள் கையளிக்கப்படும் என்பது பற்றி ஜனாதிபதி அநுர குமார திஸ்நாயக்க மௌனம் சாதிக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக் காலத்திலும் இன்றைய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தமிழர்களுக்குத் தேவை மூன்று வேளை உணவு, இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அவற்றைவிட வேறு தேவைகள் இல்லை

தொடர்ச்சி ▼

# பேரம் பேசும் சக்தியை அதிகரிக்க தமிழரசுக் கட்சிக்கு வாக்களியுங்கள்

**தொடர்ச்சி ▲**

என்ற பொருள்பட தேர்தல் மேடைகளில் பேசியிருந்தார்.

தேசிய மக்கள் சக்தி ஒரு இடதுசாரிக் கட்சி. அவர்களது சித்தாந்தத்தின் படி எல்லாச் சிக்கல்களுக்கும் பொருளாதரமே மூல காரணம், அதனைத் தீர்த்து வைத்தால் இனச் சிக்கல் மட்டுமல்ல ஏனைய சிக்கல்களும் தாமாகவே தீரும் என்பதுதான். ஆனால் உலக வரலாறு இது கனவுலகக் கோட்பாடு எனச் சொல்கிறது.

சோவியத் ஒன்றியம் 1991 இல் கரைந்து போன போது அதில் இருந்த 15 நாடுகளும் இனவழி பிரிந்து, மொழி வழி ஒன்று கூடித் தனித்தனி நாடுகளாக உருப்பெற்றன. யூகோசிலாவிக்கிய குடியரசும் 1991-1996 காலப் பகுதியில் இன, மொழி அடிப்படையில் 6 நாடுகளாக தோற்றம் பெற்றன. இந்த வரலாற்று உண்மையை – அது சொல்லும் பாடத்தை – தேசிய மக்கள் சக்தி , குறிப்பாக ஜே.வி.பி. வசதியாக மறந்து விட்டது.

அதனால் தமிழர்கள் ஒரு தனித்த தேசிய இனம், அவர்களுக்குத் தனித்த மரபுவழித் தாயகம், தனித்த மொழி, தங்களைத் தாங்களே ஆளும் உரிமை உண்டு என்பதை ஏற்க மறுக்கிறது. இனப் பிரச்சினை தொடர்பாக ஜே.வி. பி. கட்சி மஹிந்த ராஜபஷவின் சிங்கள – பௌத்த மேலாண்மைக் கொள்கையையே பின்பற்றுகிறது எனலாம்.

தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதற்கு "ஊழலை ஒழிப்போம். ஊழல்வாதிகளைச் சிறையில் அடைப்போம்" என்ற முழக்கம் முக்கிய காரணம். ஆனால் இதில் கூட ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா சறுக்கியுள்ளார்.

யாழ்ப்பாணம் கைதடியில் உள்ள பனை அபிவிருத்தி சபைக்கு முன்னாள் நிர்வாக சேவையில் பல பதவிகளை வகித்த இரேனியஸ் செல்வின் புதிய தலைவராக அமைச்சர் விஜித்த ஹேரத் அவர்களால் நியமிக்கப்பட்டார். கடந்த ஒக்ரோபர் மாதம் 21 ஆம் நாள் நல்வேளையில் செல்வின் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். ஆனால் எண்ணி 9 நாள்களில் (ஒக்தோபர் 29) செல்வின் விரட்டி அடிக்கப்பட்டு அவரது இடத்துக்கு ஊழல்வாதி என நம்பப்படும் விநாயக மூர்த்தி சகாதேவன் தலைவராக நியமிக்கப்பட்டார். இவரது நியமனத்தை எதிர்த்து சபை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த காலப் பகுதியில் 300 க்கும் அதிகமான மதுபான சாலை உரிமங்கள் வழங்கப்பட்டன. அந்தப் பட்டியலைப் பதவிக்கு வந்த 3 நாள்களில் வெளியிடப் போகிறார் என ஜனாதிபதி அநுர குமார தஸநாயக்கா சபதம் செய்தார். ஆனால் அந்தப் பட்டியலை இன்று வரை வெளியிட மறுத்து வருகிறார். ஒரு வேளை அந்தப் பட்டியலில் அவரது கட்சிக்காரர்களும் இருக்கிறார்களோ தெரியவில்லை. இவை எல்லாம் ஆட்சி மாறினாலும் காட்சிகளும் கோலங்களும் மாறப் போவதில்லை என்பதற்குக் கட்டியம் கூறுகின்றன.

தேசிய மக்கள் சக்தியின் முக்கிய பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. கடந்த காலங்களில் தமிழர்களுக்கு எதிரான தீவிர இனவாத நிலைப்பாட்டையே எடுத்து வந்திருக்கிறது. 1987 இல் எழுதப்பட்ட இந்திய – இலங்கை உடன்பாட்டை ஜே.வி.பி. மூர்க்கத்தனமாக எதிர்த்ததையும், போர்க் காலத்தில் சிங்கள இராணுவத்துக்கு ஆயிரக்கணக்கான இளைஞர்களை ஊர்தோறும் அது திரட்டியதையும் குறிப்பிடலாம். மேலும் வட- கிழக்கு இணைப்பை எதிர்த்து 2006 ஆண்டில் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து அந்த இணைப்பை இல்லாது ஆக்கிய கட்சியும் இந்த ஜே.வி.பியே என்பதை இலேசில் மறந்துவிட முடியாது.

தேர்தல் களத்தில் அதிக எண்ணிக்கையான சுயேச்சை வேட்பாளர்கள் போட்டி போடுகிறார்கள். இவர்கள் தேர்தலில் வெல்ல மாட்டார்கள் என்று தெரிந்தும் வாக்குகளைச் சிதறடிக்கத் தேர்தல் களத்தில் இறக்கிவிடப்பட்டுள்ளார்கள். இவர்களில் நியமனம் கிடைக்காத வெப்பாரத்தில் – "முந்தநாள் பெய்த மழைக்கு நேற்று முளைத்த காளான் போல" ஜனநாயக தமிழரசுக் கூட்டணி என்ற பெயரில் ஊடக முதலாளி ஈ.சரவணபவன், சட்டத்தரணி கே.வி. தவராசா சுயேச்சைக் குழுவாகப் போட்டி போடுகிறார்கள். இவர்களுக்குப் போடுகிற ஒவ்வொரு வாக்கும் வீணான வாக்குகள் – தமிழ் தேசயத்துக்கு எதிரான வாக்குகள் – என்பதை மக்களாகிய நீங்கள் நன்கு உணர வேண்டும். மேலும் தென்னிலங்கைச் சிங்கள – பௌத்த மேலாண்மைக் கட்சி வேட்பாளர்களையும் தமிழ்மக்கள் கட்டாயம் புறக்கணிக்க வேண்டும். தமிழர்கள் தங்கள் இன, மொழி, பண்பாட்டு அடையாளங்களை இழக்கக் கூடாது.

தமிழ்த் தேசியம் பற்றிப் பலர் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குப் பாடம் எடுக்கிறார்கள். இன்றல்ல 75 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்கள் ஒரு தேசிய இனம், அவர்களுக்குச் சுயநிர்ணய உரிமை உண்டு, அவற்றின் அடிப்படையில் அவர்களது வரலாற்று ரீதியான வாழ்விடமான வட – கிழக்கு தாயகத்தில் ஒரு தமிழரசை நிறுவ அவர்களுக்கு உரிமை உண்டு என்ற கோட்பாட்டை முன்வைத்து தமிழரசுக் கட்சி போராடி வருகிறது. எனவே தேசியம், தாயகம், சுயாட்சி பற்றிப் போலித் தேசியவாதிகள் எமக்கு வகுப்பு எடுக்கத் தேவையில்லை.

தமிழ்மக்களுக்கான தீர்வு தமிழீழ விடுதலைப் புலிகளும் அன்றைய இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் 2002 டிசெம்பரில் ஏற்பட்ட 'ஒஸ்லோ' உடன்படிக்கையில் சில அடிப்படைக் கோட்பாடுகளின் மீது இணக்கம் காணப்பட்டன.

'ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப் பகுதிகளில் உள்ளக சுயநிர்ணய உரிமைக் கொள்கையின் பிரகாரம் சமஷ்டி கட்டமைப்பின் அடிப்படையில மைந்த தீர்வொன்றை ஆராய்தல்' என்பதாகும்.

சர்வதேச நியமங்களின் படியும் சர்வதேச சாசனங்களின் பிரகாரமும் தமிழர்களாகிய நாங்கள் தனிச் சிறப்பு மிக்க மக்கள் குழாமாவோம். ஒரு மக்கள் குழாமான நாங்கள் பேரினவாதத்தின் பிடிக்கு ஆட்படாது கௌரவத்துடனும் சுயமரியாதையுடனும் சுதந்திரமாகவும் அச்சமின்றியும் நாட்டின் ஏனைய மக்களுடன் சமத்துவமுள்ள மக்களாக வாழ விரும்புகிறோம்.

தமிழரசின் வெற்றியைத் தவிர்க்க பல அச்சு, இலத்திரனியல், தொலைக்காட்சி ஊடகங்களும் பணமுதலைகளும் மெத்தப் பாடுபடுகிறார்கள். இதில் ஊடக முதலாளி கந்தையா பாஸ்கரன் மற்றும் லைக்கா நிறுவனத்தின் முதலாளி அல்லிராசா சுபாஸ்கரன் முன்வரிசையில் நிற்கிறார்கள். இதில் சுபாஸ்கரன் தென்னிலங்கையிலும் கோடிக்கணக்கான பணத்தை இறைத்து கட்சிகளை விலைக்கு வாங்கித் தேர்தல் களத்தில் இறக்கியுள்ளார். இதற்கு நல்ல எடுத்துக்காட்டு நடிகர் ரஞ்சன் ராமநாயக்கா தலைமையிலான ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சியாகும். இந்தக் கட்சியின் கூட்டங்களுக்குத் தலைக்கு ரூபா 5,000 கொடுத்து வாக்காளர்கள் ஏற்றி இறக்கப்படுகிறார்கள் எனச் தென்னிலங்கைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

போராடாத எந்த இனமும் விடுதலை பெற்றதில்லை. போராடிய எந்த இனமும் விடுதலை பெறாமல் விட்டதுமில்லை. எமது அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க அறவழியில் தொடர்ந்து போராடுவோம்.

எனவே தமிழ்மக்கள் வழமை போல் ஒன்று திரண்டு வீட்டுக்கு வாக்களித்து, இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளர்களை வெற்றிபெற வையுங்கள். அப்போதுதான் தென்னிலங்கை அரசுடன் பேரம் பேசும் சக்தி அதிகரிக்கும்.

எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!
– புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

– என்று உள்ளது.



# தன் சுய ரூபத்தை படிப்படியாக வெளிப்படுத்தி வருகிறது அரசு!

## செல்வம் அடைக்கலநாதன் குற்றச்சாட்டு

(கி.வசந்தன்)

அரசாங்கம் தங்களது சுய ரூபத்தை படிப்படியாக வெளிப்படுத்தி வருகின்றது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளரும் தமிழீழ விடுதலைக் கழகத்தின் (ரெலோவின்) தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

கட்சியின் பிரசார நடவடிக்கைகள் வைரவபுளியங்குளம் பகுதியில் ஆரம்பமாகி நகரின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அவரின் கூட்டணியின் வேட்பாளர் செந்தில்நாதன் மயூரன் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள், தொண்டர்கள் பங்கெடுத்திருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த செல்வம் அடைக்கலநாதன் –

இந்த அரசாங்கம் தனது சுய ரூபத்தை படிப்படியாக வெளிப்படுத்தி வருகின்றது. முதலில் ஐ.நா தீர்மானத்தை ஏற்க முடியாது என்றார்கள். 13 ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த மாட்டோம் என்றார்கள். இன்று சமஷ்டிக்கு எதிராகப் பேசுகின்றனர்.

இடதுசாரித்துவ கட்சி என்று தங்களை கூறிக்கொண்டு சிங்கள தேசியவாத கொள்கையினை நடைமுறைப்படுத்தும் ஒரு நிலையே அவர்களிடம் உள்ளது. எமது மக்கள் பல இழப்புக்களை தாண்டி வந்துள்ளனர். எனவே இனத்தின் விடுதலைக்காக மக்கள் ஒன்றிணைந்து சங்கு சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். – என்றார்.

# எல்பிட்டிய பிரதேச சபையின் தவிசாளர், துணைத் தவிசாளர் பெயரிடப்பட்டனர்




எல்பிட்டிய பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் துணைத் தவிசாளர் ஆகியோரைப் பெயரிட்டு தேர்தல் ஆணைக் குழுவினால் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

எல்பிட்டிய பிரதேச சபையின் தவிசாளராக கொழும்ப தந்திரிகே நிஷாந்த பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார் என வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

துணைத் தவிசாளராக வாகொட பதிரகே சுமித் சந்தன நியமிக்கப் பட்டுள்ளார்.

கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற தேசிய மக்கள் சக்தி எல்பிட்டிய பிரதேச சபையின் அதிகாரத்தை உறுதி செய்தது.

17 தேர்தல் வட்டாரங்களில் 15 இல் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# அரசு விடுவித்த நிதியைத் தானேதான் கொண்டு வந்தவர் என உரிமை கோருபவர் திரும்பிய நிதிக்குப் பொறுப்பேற்பாரா?

## தமிழரசு வேட்பாளர் பிரகாஷ் கேள்வி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்திற்கு அரசு விடுவித்த பணம் முழுவதையும் தான் கொண்டு வந்தார் எனக் கூறும் ஒரு முன்னாள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர், நிர்வாகம் விட்ட பிழையால் திரும்பிச் சென்ற பணத்தை கூற மறுக்கின்றார் எனத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர் தி.பிரகாஷ் தெரிவித்தார்.



2019ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்ட போதும் பணிகள் நிறைவு செய்யாமல் இடை நடுவில் பணம் திரும்பிச் சென்றது. ஆனாலும் அப் பணத்தை எடுத்து பணியை நிறைவு செய்யவும் இல்லை. அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டமையால் பணத்தைப்பெற்றிருக்கலாம். இன்று என்ன செய்தோம் என பத்திரிகைகளில் பக்கம், பக்கமாக விளம்பரம் போடும்போது இவற்றையும் கூற வேண்டும். குறிப்பாக

இளவாளை சென் ஹென்றிஸ் பாடசாலையில் விளையாட்டரங்கு ஒரு கோடி ரூபாவுக்கு ஒப்பந்தம் 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதி எழுதப்பட்டது. ஆனால் 2020 இல் வெறும் 34 லட்சத்து 15 ஆயிரத்து 835 ரூபாவிற்கான பணிகள் மட்டுமே இடம்பெற்ற நிலையில் மிகுதிப் பணம் திரும்பியது.

அராலி சரஸ்வதி வித்தியலயத்திற்கு ஒரு கோடியே 13 லட்சத்து 84 ஆயிரத்து 795 ரூபா திட்டம் அனுமதிக்கப்பட்டு 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி ஸ்ரார் கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு பணி வழங்கப்பட்ட பின்பு நிறுத்தப்பட்டது.

சங்காணை சின்னம்மா வித்தியாலயத்தில் ஓர் வகுப்பறைகளிற்காக 90 லட்சத்து 18 ஆயிரத்து 112 ரூபாவிற்கு பணி வழங்கியபோதும் வெறும் 20 லட்சம் ரூபாவுடன் திட்டம் நிறுத்தப்பட்டது.

இவ்வாறே யாழ்கோ நிறுவனத்தின் இயந்திரப்பொறி முழுமையாக மாற்றத்திற்கு 3 கோடியே 98 லட்சத்து 4 ஆயிரம் ரூபா அனுமதிக்கப்பட்டு நிறுவனம் ஒன்றிற்கு ஒப்பந்தம் வழங்கி, காலதாமதம் என்னும் பெயரில் முயற்சிக்காத காரணத்தினால் திட்டம் முழுமையாக இழக்கப்பட்டது.

இதே யாழ்கோவின் கட்டடப் பணிக்காக ஒரு கோடியே 68 லட்சத்து 36 ஆயிரந்து 750 ரூபாவிற்கான திட்டத்திற்கு 2019-05-21 இல் ஒப்பந்தம் வழங்கியபோதும் வெறுமனே 49 லட்சத்து 11 ஆயிரத்து 486 ரூபா விற்கான பணி நிறைவு செய்யப்பட்டபோதும் எஞ்சிய நிதியைப் பெற ஏற்பாடுகள் செய்யாதமையால் திட்டம் கிடப்பில் உள்ளது.

ஒப்பந்தம் வழங்கிய மொத்தப் பெறுமதி 8 கோடியே 70 லட்சத்து 43 ஆயிரத்து 647 ரூபா. ஆனால் பணி இடம்பெற்றது ஒரு கோடியே 3 லட்சத்து 27 ஆயிரத்து 321 ரூபாவிற்கு மட்டுமேயாகும். இதனால் 7 கோடியே 67 லட்சத்து 16 ஆயிரத்து 326 ரூபா பணம் திரும்பிச் சென்றது. இதற்கு யார் பொறுப்புக் கூறுவது?

இந்தத் திட்டம் ஆரம்பிக்கும்போது அதற்கு பாடுபட்டு இந்த திட்டங்களை அப்போதைய மாவட்ட அரச அதிபரும் தற்போதைய ஆளுநருமான நா.வேதநாயகனே கொண்டு வந்தார். வேதநாயகனைப் பிடிக்கவில்லை என்பதற்காக கொடுத்த விலை இந்த மாவட்ட மக்களிற்கு வந்த 7 கோடியே 67 லட்சத்து 16 ஆயிரத்து 326 ரூபா பணம் திரும்பிச் செல்லும்படியாக நடந்து கொண்டமையே ஆகும்.

2019இல் ஆரம்பித்த இந்த திட்டங்களை 2020 பெப்ரவரியில் வேதநாயகன் விரட்டப்பட்டதும் திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டன. மாறாக மே மாதம் முயன்றிருந்தால் அந்த நிதியைப் பெற்றிருக்க முடியும்.

இவற்றை செய்யத் தெரியாமல் கனவு பாழாக விட்டவர்கள் யார் என்பதனையும் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். - என்றார்.



# இலத்திரனியல் கடவுச்சீட்டு முறைமையை செயற்படுத்துவதற்கான கணக்காய்வு நிறைவு

இலத்திரனியல் கடவுச்சீட்டு முறைமையை செயற்படுத்துவதற்கான கொள்முதல் செயன்முறை தொடர்பான விசேட கணக்காய்வு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான கண்காணிப்பை முன்வைப்பதற்காக அறிக்கை குடிவரவு, குடியகல்வு திணைக்களம் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்படி அவதானிப்புகள் கிடைத்த பின்னர் கணக்காய்வாளரின் பரிந்துரையையும் உள்ளடக்கி அறிக்கையொன்றை நாடாளுமன்றத்தில் முன்வைக்கவுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இலத்திரனியல் கடவுச்சீட்டு முறைமையை செயற்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தின் காரணமாக கடவுச்சீட்டு விநியோகம் பாதிக்கப்பட்டது.

இதன் காரணமாக குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் முன்பாக நீண்ட வரிசைகள் ஏற்பட்டன.

தற்போது காணப்படும் கடவுச்சீட்டு புத்தக பற்றாக்குறைக்கு தீர்வு வழங்க நடவடிக்கை எடுத்து வருவதாக குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.



# பரத நாட்டியம், கர்நாடக சங்கீதம் தேசிய மட்டப் போட்டிகள் ஆரம்பம்

(எஸ்.கீதபொன்கலன்)

கல்வி அமைச்சினால் நடாத்தப்படும் அகில இலங்கை(சமஸ்த லங்கா) பரத நாட்டியம், கர்நாடக சங்கீதம் ஆகியவற்றுக்கான தேசிய மட்ட இறுதிப் போட்டிகள் நேற்றுத் திருகோணமலையில் ஆரம்பமாகியுள்ளன.

வடமத்திய மற்றும் தென் மாகாணம் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களின் தமிழ் மொழிப்பாடசாலைகளின் மாணவர் குழுக்கள் இப்போட்டிகளில் பங்குபற்றுகின்றன.

301 முதல்1000 மற்றும் 1001 முதல் அதற்கும் அதிக மாணவர் தொகையைக் கொண்ட பாடசாலைகளுக்கான போட்டிகள் நேற்றும், 300 மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளுக்கும், சர்வதேச பாடசாலைகளுக்குமான போட்டிகள் இன்றும் தொடர்ந்து நடைபெறவுள்ளன.

2018 ஆம் ஆண்டு முதல் வருடாந்தம் கல்வி அமைச்சினால் நடத்தப்படும் இப்போட்டிகள்,இந்த ஆண்டு முதல் தடவையாக திருகோணமலையில் நடைபெறுவதாக கல்வி அமைச்சின் கவின்கலைக்கான பிரதிக்கல்விப்பணிப்பாளர் தீபமால் விஜயதுங்க கூறினார்.













# மழையுடனான வானிலையினால் 12 ஆயிரத்து 114 பேர் பாதிப்பு

3 மாகாணங்களில் தாக்கத்தை ஏற்படுத்திய பலத்த மழையுடனான வானிலையினால் 12 ஆயிரத்து 114 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நவம்பர் முதலாம் திகதியிலிருந்து இதுவரை அவர்கள் பலத்த மழை, காற்று மற்றும் வெள்ளம் ஆகிய அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மத்திய, சப்ரகமுவ மாகாணங்களில் பகல் 01 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் ஏற்படக்கூடிய கடும் மின்னல் தாக்கங்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

நேற்று முற்பகல் 8.30 உடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் அதிகளவிலான மழைவீழ்ச்சி சிலாபம் - மெல்லவ பிரதேசத்தில் பதிவானது.

இங்கு 221.6 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தும்மலசூரிய பகுதியில் 190.3 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவானதுடன் பாலாவி பகுதியில் 150.4 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

குளியாபிட்டிய, ஆயித்தியமலை, பளுகஸ்வெவ, எல்கடுவ, உல்ஹிட்டிய ஆகிய பகுதிகளில் கடந்த 24 மணித்தியாலங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவானதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே தெதுறு ஓயா நீர்த்தேக்கத்தின் 05 வான் கதவுகள் திறக்கப்பட்டு செக்கனுக்கு 13,000 கன அடி நீர் தெதுறு ஓயாவில் விடுவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் தெதுறு ஓயாவின் இரு மருங்கிலும் வசிக்கும் மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும் என இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

நிலவும் மழையுடனான வானிலையினால் பதுளை, கண்டி, கேகாலை, குருநாகல், நுவரெலியா, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் சில பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் 50 வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள்

பொதுத் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் 50 வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் ஈடுபடவுள்ளனர் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஏற்கனவே இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஆசிய தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் கண்காணிப்பாளர்களும் எதிர்வரும் நாள்களில் வருகைதரவுள்ளனர் என தேர்தல் ஆணைக்குழு கூறியுள்ளது.



தேர்தல் ஆணைக்குழுவின் அழைப்பிற்கிணங்க மேலும் 08 நாடுகளின் தேர்தல் கண்காணிப்பாளர்களும் வருகை தரவுள்ளனர் என தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் குறிப்பிட்டுள்ளார்..

சார்க் வலய நாடுகள் மற்றும் ரஷ்யாவை பிரதிநிதித்துவப்படுத்தி அவர்கள் இலங்கைக்கு வரவுள்ளனர்.

இதேவேளை, இம்முறை பொதுத் தேர்தலில் அரச சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படுகின்றமை மிகக் குறைந்த மட்டத்தில் காணப்படுவதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 10.11.2024




இன்றைய நாளைக் கையாள்வது கடினமாக இருக்காது. வளர்ச்சி குறித்து சுதந்திரமாக முடிவெடுக்கும் உறுதியான மனநிலை காணப்படும். சிறிது முயன்றால் வெற்றி காணலாம்.

பணியிடத்தில் சிறந்த நிலையில் இருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.இதனால் இருவரிடையேயான புரிந்துணர்வு வலுப்படும்.

இன்று பண வரவு காணப்படும். அதிர்ஷ்டம் காணப்படும். இன்று பணத்தை சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும் என்றாலும் உறுதி யுடனும் கவனமுடனும் செயல்பட்டு அதனை சமாளித்து வெற்றி காண்பீர்கள்.

வேலை தொடர்பான பயணம் காணப் படும். பயணம் கடினமாக இருக்கும் மற் றும் நீங்கள் சில அதிருப்தியான சூழ்நிலையை சந் திப்பீர்கள்.

உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள் வீர்கள். உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள் வதன் மூலம் இருவரும் நல்லுறவை பராமரிக்கலாம்.

இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். இன்று செலவுகள் அதிகம் காணப்படுவதால் சேமிக்க இயலாது.

இன்று பதட்டம் காணப்படும். எனவே இன்று இதனை தவிர்த்தல் சிறந்தது.




இன்று உங்கள் செயல்களில் கவன மாக இருக்க வேண்டியது அவசியம். எதிர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ளாதீர்கள். நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் இருங்கள்.

பணியிடத்தில் அமைதியான சூழ்நிலை காணப்படாது. சக பணியாளர்கள் மற்றும் உங்கள் மேலதிகாரிகள் உங்களை புறக்கணிப்பது போலவும் தவிர்ப்பது போலவும் உணர்வீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துனையிடத்தில் பொறுமையின்மையும் கவன மற்ற வார்த்தைகளும் இருவருக்குமிடையே மகிழ்ச்சி யற்ற தன்மையை ஏற்படுத்தும். இத்தகைய நடத்தையை தவிர்ப்பதன் மூலம் மகிழ்ச்சியை அனுபவிக்கலாம்.

பணப்புழக்கம் குறைவாக இருக்கும். தேவையற்ற செலவகள் ஏற்படும்.




இன்றைய நாள் உங்களுடைய இலக்குகளை அடைய சரியான முயற்சி எடுக்க உகந்த நாள். உங்கள் செயல்களை எளிதாக செய்வீர்கள். உங்கள் உறுதி மற்றும் தைரியம் மூலம் வெற்றி பெறு வீர்கள்.

பணியிடத்தில் நன்மை கிடைக்கும். உங்கள் செயல் திறன் உங்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கும்.

நீங்களும் உங்கள் துணையும் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிப்பீர்கள். இதனால் மிகுந்த திருப்தி ஏற்படும்.

நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். நல்ல சேமிப்பு நிலையை பராமரிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப் படும்.




இன்று கடினமான சூழ்நிலைகளை கையாளும்போது கவனமாக இருக்க வேண்டிய நாள். இன்று கோபம் மற்றும் பதட்டத்திற்கு ஆளாவீர்கள். அமைதியும் நம்பிக்கையும் கொள்ள வேண்டும்.

பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்காது.

உங்கள் கோபத்தை உங்கள் துணையிடம் வெளிப் படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க நீங்கள் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் குறைவாக இருக்கும். தேவையற்ற செலவுகள் கவலையை உண்டாகும்.

அசௌகரியம் காரணமாக ஆரோக்கியம் பாதிக் கப்படும். தோல் சம்பந்தமான பிரச்சினைகளும் தூக்கமின்மையும் காணப்படும்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். மகிழ்ச்சியை தக்க வைக்க நீங்கள் சிறப்பாக செயல்பட வேண்டும்.

பணியின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. திட்டமிட்டு பணியாற்று வது விளைவுகளை மேம்படுத்த உதவி கரமாக இருக்கும். சக பணியாளர்களுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.

நீங்கள் விஷயங்களை தீவிரமான போக்கில் எடுத்துக் கொள்வதனால் உங்கள் துணையுடனான உறவு பாதி- க்கப்படும். இனிமையான வார்த்தைகளைப் பேசுவதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணபுழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. கண்களில் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதால் கண்களில் கவனம் செலுத்துங்கள்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். நீங்கள் வெற்றி பெறுவதற்கு நம்பிக்கையுடன் இவை களை சமாளிக்க வேண்டும்.முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பனியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. திட்டமிட்டு அட்டவணையிட்டு பணி யாற்றுவது அவசியம்.

உங்கள் துணையுடன் வாக்குவாதம் செய்ய முற் படலாம். அமைதியான போக்கை மேற்கொண்டு உறவில் நல்லிணக்கத்தை தக்க வையுங்கள்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. பதட்டம் காரணமாக தலைவலி ஏற்படலாம்.




இன்று வெற்றிகரமான நாளாக இருக்கும். இன்று உங்கள் இலக்கு களில் வெற்றி பெற அதிக முயற்சி எடுக்க வேண்டும். இன்று ஓய்வின்றி செயலாற்றுவீர்கள். செயல்களை எளி தாக கையாள்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

உங்கள் பணிகளை திறம்பட செய்து முடிப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அமைதியாக நடந்து கொள் வீர்கள். நீங்கள் இருவரும் சேர்ந்து பொழுதுபோக்கு விஷயங்களை கண்டு மகிழ்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். இன்று உங்கள் வங்கியிருப்பு உயர்வதைக் காண்பீர்கள். புதிய முத லீட்டிற்கான முடிவுகளை எடுக்கலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 10.11.2024




இன்று உங்கள் திட்டங்களில் பலன் கிடைக்கும் இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

பணியிடச் சூழல் சிறந்த முறையில் செயலாற்றும் வகையில் இருக்கும். உங்கள் பணியில் திருப்தி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பையும் புரிந்துணர்வையும் பகிர்ந்து கொள்வீர்கள். உங்களின் இந்த சகஜமான போக்கு உங்கள் துணையை மகிழ்விக்கும்.

நிதிநிலைமை இன்று சாதகமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். அமைதியான குடும்பச் சூழல் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று தேவையற்ற மனக் குழப்பங்கள் சுமையாக இருக்கும். நம்பிக்கையுடன் இருந்தால் நன்மை காணலாம்.

உங்கள் பணியில் தவறுகள் நேரும். கவனமாக பணியாற்றினால் சிறப்பாக செயலாற்றலாம்.

உங்கள் துணையிடம் குழப்பமான மன நிலையை வெளிப்படுத்துவீர்கள். மனதை அமைதியாக வைத்துக் கொண்டு உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை அனுபவியுங்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண இழப்பின் காரணமாக ஏமாற்றம் நிறைந்து காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். சிறப்பாக திட்டமிடுதல் மற்றும் யுக்திகளை கையாள்வதன் மூலம் வெற்றி பெறலாம். அமைதியாக இருந்து பதட்டத்தை தவிர்ப்பதன் மூலம் நன்மை கிடைக்கும்.

பணிகளை முன்கூட்டியே திட்டமிடுவதன் மூலம் தவறுகள் நேராமல் தடுக்கலாம். இதனால் உங்கள் பனியின் தரம் உயரும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ளலாம். வேறு விதமாக செயல்பட்டால் குழப்பமும் பதட்டமும் ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. என்றாலும் பூர்வீகச் சொத்து மற்றும் எதிர்பாராத வகையில் பணம் கிடைக்கும்.




இன்று நீங்கள் அதிகப் பணியில் மூழ்கி இருப்பீர்கள். புதிதாக ஒன்றை அடைவதில் உறுதியாக இருப்பீர்கள். கடினமாக உழைப்பதன் மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறந்த செயல்திறன் ஆற்ற சாதகமாக இருக்கும். உங்கள் வேலைத் தரம் உங்களின் திறமையை பறைசாற்றும். நீங்கள் பணி சம்பந்தாமான சந்திப்பில் கலந்து கொள்வீர்கள். உங்கள் கருத்துக்களை தெளிவாக கூறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். எதிர்கால முடிவுகளைப் பற்றி கலந்தாலோசித்து பரஸ்பரம் ஒரு முடிவுக்கு வருவீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலம் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் வகையில் பண வரவு காணப்படும். அது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean Group of Companies — KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park